1978 ஏப்ரல் 1]

பள்ளியிறுதித் தேர்வில் சிறப்பாகத் தேர்வு பெறுவோருக்குப் பரிசுகள்

*757 வினு—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1975-76-ம் ஆண்டில், S.S.L.C.-யில் சிறப்பாகத் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு சன்மானத் தொகையும், சான்றிதழும் இன்றுவரை வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லோருக்கும் வழங்கப்படவில்லை என்பது உண்மை இல்லை. ஆனுல் ஒரு சிலருக்குத்தான் வழங்கப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, 1975-76-ம் வருஷம் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்ற 150 மாணவர்கள் 'மெரிட் ஸ்காலர்ஷிப்' பெறுவதாக அரசு அறிவித்திருந்தும் நாளது வரையில் கார்த்தியாயினி, இராமநாதபுரம்; முரளி ப்ரீதம், இராயபுரம் போன்ற மாணவர்களுக்கு இன்று வரை ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை. பல தடவை எடுத்துச் சொல்லியும் முயற்சித்தும் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை விரைவில் எடுத்து அந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் மெரிட் ஸ்காலர்ஷிப் வழங்க தகுந்த ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975-76 ஆம் ஆண்டிற்காக சான்றிதழ் பெற 177 மாணவர்களின் பெயர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. இவர்களில் 86 மாணவர்களது தகுதிச் சான்றிதழ்கள் முதல் தொகுதியில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்று, அவர்களுக்குரிய சன்மானத் தொகையுடன் ஆகஸ்ட் 1977-லேயே கல்லூரி முதல்வர்கள் மூலம் அனுப்பப்பட்டு விட்டது. பிப்ரவரி 1978-ல் 19 சான்றிதழ்களும் மார்ச் 1978-ல் 49 சான்றிதழ்களும் ஆக மொத்தம் 68 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட மாணவர்கள் பயிலும் கல்லூரி, வகுப்பு போன்ற விவரங்கள் கல்லூரி கல்வி இயக்குனரால் கோரப்பட்டுள்ளது, இந்த விவரங்கள் கிடைத்ததும் சன்மானத் தொகையுடன் அவர்களுக்குக் கல்லூரி கல்வி இயக்குன

ரால் அனுப்பி வைக்கப்படும் மீதமுள்ள 23 பேர்களுக்கான சான்றிதழ்களை விரைவில் அனுப்பி வைக்கும்படி மத்திய அரசுக்கு அடிக்கடி நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு வருகின்றது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, அடிக்கடி நினைவூட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டும் நாளது வரையில் அந்த மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. வெகு சீக்கிரத்திலே ஏற்பாடு செய்து இந்த ஆண்டிலேயே அவர்களுக்கு மெரிட் சர்டிபிகேட் கிடைக்கவும் மெரிட் ஸ்காலர்ஷிப் கிடைக்கவும், ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மைய அரசிடமிருந்து வந்தவுடன் அவர்களுக்குக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யப்படும்.

விளையாட்டு வீரர்கள் ஊக்கத்திட்டம்.

*758 வின—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(ஆ) உலக விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டிருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) விவரப் பட்டியல் * இணைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஸ்போர்ட்ஸ் மென்னைப்பற்றி கேட்டிருக்கிறேன் ஸ்போர்ட்ஸ் விமனுக்கும், பெண்களுக்கும் இந்தச் சலுகைகளை அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர் என்ற அடிப்படையிலே பெண்களுக்கும் உண்டு.

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்: தலைவர் அவர்களே, இப்போது அர்ஜன்டினுவில் நடந்து கொண்டிருக்கும் உலக கோப்பை ஹாக்கி விளையாட்டிற்கு தமிழக கேப்டனுக பிலிப்சும், பாஸ்கரனும் நடுவராக முகமது கௌசு என்ற மூன்று நண்பர்களும் சென்றிருக்

[110ம்- பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]